கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அசல் வழக்கு எண்.304/2023

வா.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **அழகுராஜன்** | தொழில் | டவுன் சர்வேயர் |
| தகப்பனார் பெயர் | **ரத்தினம்** | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | தேதி | 10.12.2024 |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் மாநகராட்சி டவுன் சர்வேயராக பணிபுரிந்து வருகிறேன். திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு இந்த நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற அழைப்பாணையின் பெயரில் அழைப்பாணையில் கோரப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்ய வந்துள்ளேன். மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் வகைக்கு ஆணையர் வழங்கிய அதிகார கடிதம் சா.சா.ஆ.1 குறியிடப்படுகிறது. டவுண் சர்வே எண்.376/1 மற்றும் 376/2 சம்பந்தப்பட்ட திண்டுக்கல் டவுன் சர்வே ரிஜிஸ்டர் சான்று நகல் தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ.2 ஆக குறியிடப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள திண்டுக்கல் டவுன் சர்வே ரிஜிஸ்டரில் மாநகராட்சி ஆவதற்கு முன்பாக டவுன் சர்வே ரிஜிஸ்டர் தான். மேற்படி டவுன் ரிஜிஸ்டரில் 376 மற்றும் 377 சர்வே எண்கள் உட்பிரிவு செய்யப்படவில்லை. மேற்படி சர்வே எண்.376 ல் உள்ள 646 ச.அடி நிலம் கித்தெரியம்மாள் பெயரில் உள்ளது. சர்வே எண் 377 ல் உள்ள 777 ச.அடி நிலம் ஆரோக்கியம் பெயரில் உள்ளது. 02.03.2024 ஆம் தேதியில் இந்நீதிமன்ற ஆணையர் மேற்படி நிலத்தை பார்வையிடும் போது நான் உடன் இருந்தேன். மேலும், கிராம நிர்வாக அலுவலரும் உடன் இருந்தார். தற்போது 376 சர்வே எண் 376/1, 376/2 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

**மறுவிசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2024.12.11 10:59:12 +0530

Additional District Judge(FAC),

Dindigul.